கட்டுதல், சலவைக் கூடம், மருந்துகள் பாதுகாப்பாக, மருத்துவ கருவிகள் பாதுகாப்பாக இருக்க தனி அறை. 6 வண்டிகள் நிறுத்த கெட்டில் கட்டுவது போன்ற பல்வேறு குறிப்புகள் அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் அரசினுடைய நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இவைகள் எல்லாம் உடனடியாக செய்ய முடியாது. அரசு அவ்வப்போது நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக இவைகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்துப் பழுதுபார்க்கும் பணிமனை.

*6474 திருமதி பாப்பா உமாநாத்:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளை கருவிகளை பராமரித்து பழுதுபார்க்கும் பணிமனை, தொழிற்கூட தகராறு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தும் அச்சட்டம் அமலாக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அச்சட்டத்தை அமாலாக்கி, பணி நிரந்தரம், வருடாந்திர ஊதிய உயர்வு, இ. எஸ், ஐ. சலுகை அனுமதித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்து பழுது பார்க்கும் பணிமனை, தொழிற்கூடத் தகராறுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை சட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன்.

* 5274 திரு. பொன். விஜயராகவன்:
மாண்புமிகு செய்தி பற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன் 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டத்திற்கு முரணாக நடப்பதாக புகார் அரசுக்கு வந்துள்ளதா?